1971 ஜூலை 20]

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையிலே ரயில்வே காலனிக்கு அருகாமையில் இந்த இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதே, அங்கே வெகு நேரம் இருநூறு பேர், முந்நூறு பேர் பல மணி நேரம் நிற்கவேண்டியிருக்கிறதே, அப்படியானால் அந்த இடத்தை மாற்ற அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினரின் யோசனையைப் பரிசிலிக்கலாம்.

மதுரையிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

* 284 வினா—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 13—4—1971-ம் தேதியன்று மதுரையில் திறக்கப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை செயல்படத் தொடங்கி விட்டதா?

(இ) ஆமெனில், அங்கு தற்பொழுதுள்ள அகநிலைப் பிணி யாளர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம்.

(இ) 58.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதியதாக மதுரையில் ஆரம்பித்திருக்கிற இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 201 பேர் வரையில் இருக்கலாம் என்று அன்றைக்கு சொல்லப்பட்டது. இப்போது அங்கே அதில் நான்கில் ஒரு பங்குதான் இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றுகூட அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்யப்படாமல் இருக்கிறதே, இதற்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டும் வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று கூட குடிதண்ணீர் வசதிக்கு மாநகராட்சியில் இருந்து சில லாரிகளில் வந்து கொண்டிருக்கின்றது. இதற்கு மாறாக மெயின் கனெக்ஷன் கொடுத்து வியாதியஸ்தர்களுக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ? இப்போது சில விசேஷங்கள் வந்துவிட்டால் 12 மணி வரை கூட மாநகராட்சி லாரி வராது. தண்ணீர் இல்லாது அங்கே உள்ளவர்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே நிரந்தரத் தண்ணீர் வசதிக்கு உத்தரவாதம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் . மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்று ஆவன செய்யப்படும்.

[1971 ஜூலை 20

திரு. ஜே. ஜேம்ஸ் : நமது மாநிலத்தில் எங்கெங்கே அதிகமாக பல்வேறு தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதே அந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நமக்கு அளிக்கப்படுகிற நிதி உதவியை விட ரூ. 1½ கோடி அதிகமாக மாநில அரசு செலவிடுகிறது. கடந்த 6 மாதங்களில் ஏழெட்டு இடங்களில் மருத்துவ விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நிதி வசதி பெருகுமானால் இன்னும் அதிக அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல நிறைவேற்ற முடியும்.

உர வகைகளின் விலைகள்.

* 294 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு மாநில அரசுகளுக்கு விற்பனை செய்கின்ற வெவ்வேறு உரங்களின் விலை என்ன ?

(இ) உழவர்களுக்கு இவ்வரசு விற்பனை செய்யும் இந்த உரங்களின் விலை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) பேரவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே விவசாயிகளுக்கு இம்மாதிரி உரங்கள் சப்ளை பண்ணுகிற நேரத்தில் அதற்காக அரசு சப்ஸிடி கொடுத்து வந்தது. இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரங்களைப் பார்த்தால் பல உரங்கள் 90 ரூபாய், 100 ரூபாய் வரையிலும் அதிகமாக விற்கப்படுகிறதே. குறைந்த விலையில் கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1969-க்கு முன்பு விலைப் பட்டியல் மூலமே மத்திய அரசு கொடுத்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. கலால் வரி உயர்ந்த பிறகு கூடுதல் விலையில் கொடுக்கக் கூடாது என்பதாக முன்பு இருந்த விலைக்கே அரசு கொடுத்தது. சில குறிப்பிட்ட உரங்கள் விலை ஏறிவிட்ட காரணத்தினால் நாம் விவசாயிகளுக்குக் கொடுக்கிற உரங்களின் விலை கூடுதலாக இருக்கிறதே தவிர, அரசு லாப நோக்கத்தோடு எதையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : According to the answer given by the Hon. Minister, the price of Ammonium Sulphate is about Rs. 72 in excess of the Central Government pool price. Urea is about Rs. 90 in excess of the Central Government pool rate. So, will this Government come forward at least to minimise the rate

---

@ 383–384-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.